தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில், சதுரகிரி, சாப்டூர்,

பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.
அலுவலகம் (இருப்பு) வத்திராயிருப்பு. – 626132
**Phone: 04563 –288155** **Email:** srisundharamahalingaswamy@gmail.com

அனுப்புநர் :
க.விஸ்வநாத்,
செயல் அலுவலர்,

பெறுநர்:
இளமின் பொறியாளர் அவர்கள்,
மின்சார வாரியம்
சாப்டூர்.

ஐயா,

நாள்:28.05.2021

OFFICE OF THE ASSISTANT ENGINEER
CR.No. 261
Date 31-5-21
SAPTUR

பொருள்: மின்வசதி செய்து தரும் பணி – அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் – சதுரகிரி – சாப்டூர் – பேரையூர் வட்டம் – மதுரை மாவட்டம் – தொடர்பாக.

----

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சாப்டூர், சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு சந்தனமகாலிங்கசுவாமி திருக்கோயில் ஆகிய இவ்விரண்டு திருக்கோயில்களும் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களாகும். இத்திருக்கோயில் நிலை–2 செயல் அலுவலர் மற்றும் சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் பரம்பரை அறங்காவலாராலும், அருள்மிகு சந்தனமகாலிங்கசுவாமி திருக்கோயில் தக்காராலும் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்விரு திருக்கோயில்களும், மேற்கு தொடர்ச்சி மலையில் தரை மட்டத்திலிருந்து சுமார் 3050 அடி உயரத்தில் மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சாப்டூர் கிராமம், சதுரகிரி மலை மீது ஒதுக்கப்பட்ட வனப் பகுதியில் (ரிசர்வ் பாரஸ்ட்) அமைந்துள்ளது.

மேற்படி வனப் பகுதியில், மைனர் இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்திரவு SR. No. 97/M.I.ACT/TMM/68 DATED 15.05.1968 ன்படி, சாப்டூர் கிராமம் ச.எண்.517ல் ஏக்கர் 63 செண்ட் 76 இடமானது சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமானதாகும். மேலும் உசிலம்பட்டி பாரஸ்ட் அலுவலர் உத்திரவு நாள் 31.01.78ன் படி சாப்டூர் கிராமம் ச.எண்.518ல் ஏக்கர் 10, இடமானது அருள்மிகு சந்தனமகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமானதாகும்.

மேலும் இத்திருக்கோயில் வளாகப்பகுதியில் உள்ள போர்வெல் மற்றும் கிணறு மோட்டார்கள், மின்விளக்குகள் மற்றும் குடிநீர் தேவைகளுக்கு,மின்மோட்டார்களை

இயக்குவதற்கு தேவைப்படும் மின்பளு விபரம் அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு 40kva(கிணறு–2, போர்வெல்–4 மற்றும் பக்தர்கள் தங்கும் மண்டபங்கள்) மற்றும் அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு 30kva(கிணறு–2 மற்றும் பக்தர்கள் தங்கும் மண்டபங்கள்) மற்றும் பலாமரத்தடி கருப்பசுவாமி கோயில் அருகில் உள்ள கீழ்நிலை குடிநீர்தொட்டி மற்றும் கிணறு–1 போர்வெல்–3) 30kva மின்பளு தேவைப்படுகிறது. கோயில் வளாகத்தில் பக்தர்கள் தங்கும் மண்டபங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் மின் விளக்குகள் போன்றவைகளுக்கு தேவையான மின்பளு விவரப்பட்டியல் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் மலைபாதையில் உள்ள ஓடைகளை கடந்து தான் பக்தர்கள் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை நடந்து செல்லும் பாதையாக உள்ளது. சாதாரண நாட்களிலும் அமாவாசை, பௌர்ணமி மற்றும் ஆடி அமாவாசை, தை அமாவாசை, போன்ற விசேச நாட்களிலும், பலாயிரக்கணக்கில் வருகை புரியும் பக்தர்கள் தங்கும் மண்டபம் மற்றும் குடிநீர் போன்ற அடிப்படை வசதிக்கு தேவையான மின்சார வசதி செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

28.05.2024

நிர்வாக அதிகாரி
அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோயில்
சதுரகிரி, அலுவலகம் (இ) வத்திராயிருப்பு-626 13.

இணைப்பு:

1. மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள், மதுரை.
2. இணை ஆணையர் அவர்கள்,
   இந்து சமய அறநிலையத்துறை, திண்டுக்கல்.
3. வன உயிரின பாது காவலர், திருவில்லிபுத்தூர்.
4. பரம்பரை அறங்காவலர், மேற்படி திருக்கோயில்.
5. தலைமை பொறியாளர் அவர்கள், மின்சார வாரியம், மதுரை.
6. மேற்பார்வை பொறியாளர் அவர்கள், மின்சார வாரியம், மதுரை.
7. செயற் பொறியாளர் அவர்கள், மின்வாரியம், திருமங்கலம்.
8. உதவி செயற் பொறியாளர் அவர்கள், மின்வாரியம், கல்லுப்பட்டி

# சான்று

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம் சாப்டூர் கிராமம் சர்வே எண் 517 - 25.80.5 (ஏர்ஸ்) நிலத்தில் அருள்மிகு சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவில் அமைந்துள்ளது. மேற்படி கோவிலுக்கு நான்கு மால்.

வடக்கு - 518 - ஒதுக்கப்பட்ட காடு (RF)
தெற்கு - 518 - ஒதுக்கப்பட்ட காடு (RF)
கிழக்கு - 518 - ஒதுக்கப்பட்ட காடு (RF)
மேற்கு - 518 - ஒதுக்கப்பட்ட காடு (RF)

மேற்கண்டவாறு நான்குமால் அமைந்துள்ளது.
தங்களுக்கு வழங்கப்படும் சான்று.

[signature] 31/3/2011

Village Administrative Officer,
30. Saptur, Peraiyur Tk
Madurai Dist.